

தனி பிரதி
ரூ.10/-

**PORIYIYAL KADHIR**



# பொறியியல் கதிர்

கதிர் 47 | பாரிப்பு 7 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | மார்ச் 2016



AIFODE 23 வது தேசிய பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய பழங்குடி நலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஜாவல் ஓரம் அவர்களுக்கு TNEA பொதுச் செயலாளர் பொறி.த.முருகேசன் அவர்கள் மாலை அணிவித்தார். அருகில் AIFODE மற்றும் SAARC அமைப்பின் தலைவர் பொறி.சத்ணாம் சிங் தனோவா அவர்கள்.

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம் 1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு 2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

## AIFODE மற்றும் SAARC அமைப்பின் தலைவர் பணி நிறைவு பெற்றதையொட்டி கௌரவிக்கப்படுகிறார்.



Our Great leader Er.Sathnam Singh Dhanoa Ji is honoured by our General Secretary **Er.D.Murugesan.**



அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் முன்னாள் தலைவர் பொறி.சத்ணாம் சிங் தனோவா அவர்களுக்கு தென்மண்டல செயலாளர் பொறி.வி.வி.சிதம்பரம் அவர்கள் சால்வை அணிவித்தார்.



**பொதுச் செயலாளர் மடல்**

**மடல் - 7 (2015 - 2016)**

# தொடரும் நம் பயணம் .......

## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

கடந்த 30,31.01.2016 ஆகிய இரண்டு நாட்களில் டெல்லியில் அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் 23வது தேசிய பொதுக்குழு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக நானும், அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் அவர்களும் கலந்து கொண்டோம்.

முதல்நாள் நிகழ்ச்சியில் மத்திய பழங்குடிநலத்துறை அமைச்சர் மாண்புமிகு ஜாவல் ஓரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜாவல் ஓரம் அவர்கள் ஒரு பட்டயப் பொறியாளர் என்பது நமக்கு பெருமையான விஷயம். இவர் அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் ஒரு புரவலர் (PATRON) என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய அரசின் ஏழாவது சம்பள கமிஷனில் இளநிலைப் பொறியாளர்களுக்கும் அனைத்துப் பதவிகளில் உள்ள பட்டயப் பொறியாளர்களுக்கும் உரிய ஊதியம் கிடைக்க பாடுபடுவேன் என்று கூட்டத்தில் பேசினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்திற்கு பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. அதில் தென்மண்டல செயலாளராக பொறியாளர் திரு. V.V.சிதம்பரம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் உள்ள கோப்புகள் ஒவ்வொன்றாக முடிந்துக்கொண்டிருக்கின்றன. 31 இளநிலைப் பொறியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ள 19 இளநிலைப் பொறியாளர்களின் விவரங்கள் முழுமையாக தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு வந்து சேராததால் அவர்களை பணிவரன்முறை செய்ய இயலவில்லை. அவர்களை பற்றிய கூடுதல் விவரங்கள் கேட்டு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு எழுதப்பட்டுள்ளது. எனவே உரிய விவரங்களை தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க உரிய நடவடிக்கை எடுக்க சங்க பொறுப்பாளர்களையும், சம்பந்தப்பட்ட தனிநபர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

29.02.2016 அன்று மாலை தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை சந்தித்த பொழுது மீதமுள்ள கோப்புகளை நாளை (1.3.2016) முடித்துத் தருகிறேன் என்று உறுதியளித்தார். நம் முன்னிலையிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 1.3.2016 அன்று மீதமுள்ள கோப்புகளை முடிக்க அறிவுரை வழங்கினார். எனவே அனைத்துக் கோப்புகளும் முடிந்துவிடும் என நம்புகிறோம்.

உதவி பொறியாளர் / இளம் பொறியாளர் முதுநிலைப்பட்டியல் தயாரித்து தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டது. அதில் ஊட்டுப்பதவியிலிருந்து உதவி பொறியாளர் பதவி பெற்றவர்களை இளம் பொறியாளர் முதுநிலையில் வைத்து அனுப்பியதாக தெரிகிறது. மரியாதைக்குரிய பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை சந்தித்து இது தவறு என்பதை விவரித்தோம். எனவே, கோப்பு தலைமை பொறியாளர் (பொது) அவர்களுக்கு திருப்பப்பட்டுள்ளது. முதுநிலையில் இடம் பெற்றுள்ள அனைவருக்கும் நகல் அனுப்ப வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். முதுநிலைப்பட்டியல் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை சந்தித்து இந்த முதுநிலைப் பட்டியல் எப்படி தவறு என்பதை விவரித்தோம். இது ஒரு முன் வரைவு (DRAFT) மட்டுமே. முடிவு செய்யப்பட்ட முதுநிலைப் பட்டியல் அல்ல என்று தெளிவுப்படுத்தினார். எனவே சிலரால் பரப்பப்படும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று பொறியாளர்களை கேட்டுக் கொள்கிறோம். நமக்கு உரிய நியாயம் கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம்.

இந்தப் பிரச்சினையை உரிய முறையில் அணுகி அநீதியை களைவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(து. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

**FINANCE (Pension) DEPARTMENT**

**G.O.No.57, Dated 22nd February 2016.**

(Manmatha, Maasi - 10, Thiruvalluvar Aandu - 2047

**ABSTRACT**

**TAMIL NADU GOVERNMENT SERVANTS' FAMILY SECURITY FUND SCHEME** - Lumpsum amount payable in case of death of Government servant while in service - Enhancement from Rs.1,50,000/- to Rs.3,00,000/- - Orders - Issued.

**Read:**

1. G.O.Ms.No.1515, Finance (Pension) Department, dated: 03.12.1973.
2. G.O.Ms.No.131, Finance (Pension) Department, dated: 21.02.2006.

**ORDER**:

The Tamil Nadu Government Servants' Family Benefit Fund Scheme, subsequently renamed as Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme was launched with effect from 1.1.1974, as a self insurance scheme without involving Life Insurance Corporation of India to support the family of Government employees including those in temporary and non-pensionable service, persons in foreign service and on deputation (menials paid from contingencies) and persons borne on provincialised work-charged establishments and All India Service Officers belong to Tamil Nadu cadre, who die in harness. The subscriber's contribution under the scheme was initially fixed at Rs.10/- p.m. deducted from the pay bill. The lumpsum amount payable in the case of death of the subscribers while in service was fixed at Rs.10,000/-.

2. The monthly contribution and lumpsum amount payable under this scheme were revised from time to time. In the Government Order second read above, it was ordered to deduct a sum of Rs.30/- p.m. as subscribers' contribution and to pay a sum of Rs.1,50,000/- as lumpsum amount in the event of death of the Government servant under this scheme.

3. The Hon'ble Chief Minister of Tamil Nadu has made an announcement under Rule 110 of Tamil Nadu Legislative Assembly Rules on 19.02.2016 to enhance the lumpsum amount payable under the above scheme to Rs.3,00,000/- and to deduct Rs.60/- per month towards subscription from the salary of the Government employees.

4. Accordingly, the Government issues the following orders:-

(i) The lumpsum amount payable under Tamil Nadu Government Servant's Family Security Fund Scheme shall be enhanced to Rs.3,00,000/-. This shall take effect from 1.2.2016.

(ii) The employees contribution under this scheme shall be enhanced to Rs.60/- p.m. with effect from February 2016 and this nominal deduction of Rs.60/- p.m. will continue till the superannuation of the Government Servants.

(iii) The existing rules and other instructions governing the Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme shall continue.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

## 2016 ஜனவரி 30 மற்றும் 31 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் 23 வது தேசிய பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகள் (AIFODE)

அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் (AIFODE) 23 வது தேசியப் பொதுக்குழுக் கூட்டம் 2016, ஜனவரி 30 மற்றும் 31 நாட்களில் புதுடெல்லியில் நடைபெற்றது. முதல் நாள் நிகழ்வு புதுடெல்லி லட்சுமி நகரில் உள்ள மாவட்ட வளாகத்தில் உள்ள (SCOPE MINOR) அரங்கில் நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வு நமது அகில இந்திய மாமன்றத்தின் தலைமை அலுவலகம் உள்ள தத்பவனில் நடைபெற்றது. இந்த இரண்டு நாள் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள இந்தியாவில் உள்ள மாநிலங்களில் இருந்து மத்திய - மாநில அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன டிப்ளமா பொறியாளர் பேரவை / சங்கங்கள் சார்பில் பொதுக்குழு உறுப்பினர்கள் வருகை தந்திருந்தனர்.

முதல் நாள் நிகழ்வு:

முதல் நாள் நிகழ்வு பொதுக்குழு உறுப்பினர்களின் பதிவுடன் துவங்கியது. மாநில வாரியாக, சங்க வாரியாக உறுப்பினர்கள் ரூ.200/- பதிவு கட்டணமாக செலுத்தி பதிவு செய்து கொண்டனர். தமிழகத்தின் சார்பில் கீழ்க்கண்டவர்கள் பொதுக்குழு உறுப்பினர்களாக கலந்து கொண்டனர்.

1. பொறி. வி.வி.சிதம்பரம் - மாமன்ற (AIFODE) தென்மண்டல செயலர்/தலைவர்/TWAD சங்கம்
2. பொறி.கே.வாசுதேவன்-பொதுச் செயலாளர்/ பேரவை/ சென்னைக் குடிநீர்.
3. பொறி.ஆர்.கருணாகரன் - வெளியீட்டுச் செயலாளர்/ பேரவை, பொதுச்செயலர்/BEL/DEA
4. பொறி.த.முருகேசன் - பொதுச் செயலாளர், TNEA/PWD
5. பொறி.எஸ்.கண்ணன் - செயலர், அமைப்புச் சட்டம் TNEA/PWD
6. பொறி.ஆர்.சோலையப்பன் - துணைத்தலைவர் TWAD சங்கம்
7. பொறி.எம். காளிராஜ் - நிதிச்செயலாளர் TWAD சங்கம்
8. பொறி.S. கிருபாகர் - பொதுச் செயலாளர் தமிழ்நாடு ஓவர்சியர் சங்கம்.

இவர்கள் தவிர தமிழ்நாடு ஓவர்சியர் சங்கத்தின் 3 உறுப்பினர்கள் பொதுக்குழுவின் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். உறுப்பினர்கள் பதிவு காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெற்றது. பின்னர் 12.30 மணிக்கு பொதுக்குழுக் கூட்டம் துவங்கியது. பொதுக்குழு கூட்டத்தினை மத்திய அரசின் பழங்குடி நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.ஜாவல் ஓரம் அவர்களும், மூத்த தலைவர்களும் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை மாமன்றத்தின் தலைமைப் பொதுச்செயலாளர் பொறி.ஆர்.கே.சிங் அவர்கள் வரவேற்றார். மாமன்றத் தலைவர் பொறி.சத்னாம் சிங் தனோவா அவர்கள் தலைமை வகித்தார். மாமன்றத்தின் மூத்த துணைத் தலைவர் பொறி.சிவானந்த உகர் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பொதுக்குழுவிற்கு சிறப்புரையாக மத்திய அரசின் பழங்குடி நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.ஜாவல் ஓரம் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஜாவல் ஓரம் அவர்களுக்கு TNEA பொதுச்செயலாளர் த.முருகேசன் அவர்கள் மாலை அணிவித்தார்.

பின்னர் மாமன்றத்தின் மூத்த தலைவர்கள் பொறி.பிரம்ம தத், பொறி. சீத்தாராம் சர்மா, பொறி.அருண்குமார், பொறி.எப்.சி.ஜெயின், பொறி.எஸ்.எஸ்.துபே , பொறி.டி.சி.பரத்வாஜ், பொறி.ஆர்.சி.ஸ்ரீவத்சவா ஆகியோரும் உரையாற்றினார்கள். பின்னர் மத்திய அரசின் மூத்த தலைவர்களுக்கு சால்வை அணிவிக்கப்பட்டு, நினைவுப் பரிசும் அளிக்கப்பட்டது.

பின்னர், 3.00 மணிக்கு உணவு இடைவேளை விடப்பட்டு, 4.00 மணிக்கு பொதுக்குழு கூட்டம் தொடர்ந்தது. அப்போது மாமன்ற பொதுச்செயலாளர் செயல் அறிக்கை, நிதிச் செயலாளரின் அறிக்கை பொதுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் 7 வது ஊதிய குழுவின் சிபாரிசுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டதுடன் இறுதியாக மாமன்ற தலைவர் பொறி.சத்னாம் சிங் தனோவா அவர்கள் நிறைவுரை நிகழ்த்தியதுடன் இரண்டாம் நாள் பொதுக்குழு கூட்டம் 31.01.2016 ஞாயிறு காலை 9.00 மணிக்கு துவங்கும், புதிய பொறுப்பாளர்கள் தேர்தலும் நடைபெறும் என அறிவித்தனர். தேர்தல் அதிகாரிகளாக மூத்த பொறியாளர்கள் பிரம்ம தத், அருண்குமார், ராஜ்நாத்சிங் ஆகியோர் செயல்படுவார்கள் என அறிவித்து முதல் நாள் நிகழ்வு முடிவுற்றதாக அறிவித்தனர்.

**பொதுக்குழுக் கூட்ட இரண்டாம் நாள் நிகழ்வு:**

பொதுக்குழு கூட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு 31.01.2016 ஞாயிறு காலை 9.00 மணிக்கு காலை சிற்றுண்டியுடன் துவங்கியது. மாமன்றத்தின் தலைவர் பொறுப்பிற்கு 4 உறுப்பினர்கள் போட்டியிடுவதாக அறிவித்தனர். இதனால் மாமன்றத்தின் ஒற்றுமையை பாதுகாக்க வேண்டி மாமன்றத்தின் தற்போதைய தலைவர் பொறி.சத்னாம் சிங் தனோவா, ஓய்வு பெற்ற டிப்ளமா பொறியாளர் மன்றத்தின் தலைவர் பொறி.எஸ்.எஸ்.துபே, ராஜஸ்தான், மாநில பேரவைத் தலைவர் பொறி.ராஜேந்திர பிரசாத் பச்சோரி ஆகியோர் அனைத்து மாநில பேரவை தலைவர்களையும், தலைவர் பொறுப்பிற்கு போட்டியிடும் உறுப்பினர்களையும் அழைத்து தனியாக கருத்தினை கேட்டறிந்ததுடன், மாமன்றத்தின் ஒற்றுமையை காக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தனர்.

பின்னர் முடிவினை அறிவிக்கும் பொறுப்பை மேற்கண்ட தலைவர்கள் ஏற்க வேண்டும் என்பதுடன், அவர்களின் முடிவினை அனைத்து மாநில தலைவர்களும், போட்டியிடும் உறுப்பினர்களும் ஏற்றுக்கொள்வது என முடிவெடுக்கப்பட்டது. இந்த முடிவு தேர்தல் அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் தேர்தல் விதிமுறைப்படி அனைத்து பொறுப்புகளுக்கும் வேட்பு மனு முன்மொழிவு, வழி மொழிவு செய்யப்பட்டு பரிசீலனை செய்து, வேட்புமனு திரும்பப் பெற கால அவகாசம் என கடைப்பிடிக்கப்பட்டு 2016-2017 ஆண்டிற்கான மாமன்ற பொறுப்பாளர்கள் ஒரு மனதாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரிகள் பொறி.பிரம்ம தத், அருண்குமார், ராஜ்நாத்சிங் ஆகியோர் அறிவித்தனர்.

1. பொறி.ஆர்.கே.சிங் - தலைவர்
2. பொறி.சிவானந்த உகர் - மூத்த துணைத்தலைவர்
3. பொறி.மன்மோகன் ராஜ் போன்ஸ்சி - தலைமைப் பொதுச்செயலாளர்
4. பொறி.R.K.பட்டேல் - கூடுதல் பொதுச் செயலர்
5. பொறி.V.V. சிதம்பரம் - தென் மண்டல செயலர்
6. பொறி.S.பீதாம்பரசாமி - பொதுத்துறை நிறுவன பிரிவு செயலாளர்
7. பிரிஸ் கிரோஷ், பிராத் யாதவ் - தணிக்கையாளர்

இவர்கள் தவிர இன்று 16 பேர் பல்வேறு பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாமன்றத்தின் தலைமை காப்பாளர் பொறி.பிரம்ம தத் அவர்கள் உறுதிமொழி கூற அவர்கள் அதனை திரும்பக்கூறி பொறுப்பேற்றுக் கொண்டனர். பின்னர், புதிதாக பொறுப்பேற்றவர்களை வாழ்த்தியும், நமது பிரச்சினைகள் குறித்தும் பலர் உரையாற்றினார்கள். நமது பேரவை சார்பில் பொதுச் செயலாளர் பொறி.கே.வாசுதேவன் அவர்கள் உரையாற்றினார். அவரது உரையில் நமது மாமன்றத்தின் பெருமை, பொதுக்குழுக் கூட்டம், ஒற்றுமை, 7வது ஊதியக்குழு பரிந்துரைகள் குறித்து உரையாற்றினார். பின்னர் மாமன்றத்தின் முன்னாள் தலைவர் பொறி.சத்னாம் சிங் தனோவா அவர்கள் ஆற்றிய பணியை பாராட்டியும், அவர்கள் பணிவிடை பெற்றதற்காகவும் பாராட்டியதுடன் பேரவை சார்பில் மூத்த தலைவர் பொறி.பிரம்ம தத், சென்னை குடிநீர் வாரிய யூனியன் சார்பில் மூத்த தலைவர் பொறி.அருண்குமார், TNEA/PWD சார்பில் பொறி.த.முருகேசன், TWAD சங்கம் சார்பில் தென்மண்டல செயலர் பொன்.வி.வி. சிதம்பரம் ஆகியோர் சால்வை அணிவித்தனர்.

பின்னர், கடந்த 3 ஆண்டில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு மாமன்றம் சார்பில் முன்னாள் தலைவர் பொறி.சத்னாம் சிங் அவர்கள் தமிழகத்தைச் சார்ந்த தென் மண்டல செயலர் பொறி.வி.வி.சிதம்பரம், பேரவை பொதுச் செயலாளர் பொறி.கே.வாசுதேவன், TNEA/ PWD சங்க பொதுச் செயலர் பொறி.த.முருகேசன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்கள். மேலும் தமிழகத்தின் சிறப்பு பேரவை, பொறியாளர்கள் செயல்பாடு குறித்து மூத்த தலைவர் பொறி.பிரம்மதத் அவர்கள் சிறப்பாக பாராட்டியது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

நமது அகில இந்திய மாமன்றம் இந்திய நாடாளுமன்றம் போன்று ஜனநாயகம் என்ற தத்துவத்தை உண்மையில் கடைப்பிடித்து அனைத்து டிப்ளமா பொறியாளர்கள் நல்வாழ்வை மேம்பட பாடுபடுகிறது. அதைத் தொடர்ந்து பேணி பாதுகாத்து செயல்பட வேண்டும் என்பதே 23வது தேசிய பொதுக்குழுவின் செய்தியாகும். அதை ஏற்று நாம் அனைவரும் செயல்பட வேண்டும் என்ற உறுதிமொழியுடன் உறுப்பினர்கள் பொதுக்குழு கூட்டத்தினை நிறைவு செய்து விடைபெற்று சென்றனர்.

**தொகுப்பு: - பொறி.வி.வி. சிதம்பரம்**
தென்மண்டல செயலர் மாமன்றம்(AIFODE)
தலைவர் / TWAD

## 2016 ஆம் ஆண்டு ஓய்வு பெற உள்ள ஆட்சி அலுவலர், உதவி பொறியாளர் மற்றும் இளம் பொறியாளர் அவர்களது பெயர் பட்டியல்

கடித எண். எஸ் 1(2) 38291 / 2015 / நாள். 24.11.2015

### ஜனவரி 2016

| திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவி | பணிபுரிந்த அலுவலகம் |
|---|---|---|---|

----------- ஒருவருமில்லை -----------

### பிப்ரவரி 2016

| | | | |
|---|---|---|---|
| 1. E. மனுவேல அப்பாத்துரை | 14.02.1958 | உ.பொ | தாமிரபரணி வடிநில வட்டம், திருநெல்வேலி. கோதையாறு வடிநில கோட்டம், நாகர்கோவில் |
| 2. R. சுப்பிரமணியன் | 15.02.1958 | இ.பொ | கீழ் வைகை வடிநில வட்டம், சிவகங்கை கீழ் வைகை சிறப்பு திட்ட கோட்டம்,மானாமதுரை |

### மார்ச் 2016

| | | | |
|---|---|---|---|
| 1. V. முருகேசன் | 15.03.1958 | உ.பொ | பெண்ணையாறு வடிநில வட்டம் திருவண்ணாமலை மேல் பெண்ணையாறு வடிநில கோட்டம், தருமபுரி (30.09.2010 பி.ப. முதல் த.ப.நீ). |
| 2. K.முத்துகிருஷ்ணன் | 19.03.1958 | உ.பொ | பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சி சோலையார் வடிநில கோட்டம், வால்பாறை. |
| 3. R.சபாநாயகம் | 29.03.1958 | இ.பொ (மின்) | மின் வட்டம், சென்னை, மின் கோட்டம் எண் 1, சென்னை |

### ஏப்ரல் 2016

| | | | |
|---|---|---|---|
| 1. G. கோபி | 24.04.1958 | இ.பொ | பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சி சிறப்பு திட்ட கோட்டம், ஆழியார் நகர் |

### மே 2016

| | | | |
|---|---|---|---|
| 1. P. ஹேமாவதி | 14.05.1958 | ஆ.அ | முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொபது அலுவலகம், சேப்பாக்கம், சென்னை. |
| 2. E. சாந்தி | 09.05.1958 | ஆ.அ | கட்டட க(ம)ப வட்டம், வேலூர் |
| 3. A. ராஜேந்திரன | 18.05.1958 | ஆ.அ | தலைமைப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை - 25 |
| 4. D.அருள்மணி ஜான்ஸ் | 20.05.1958 | ஆ.அ | கீழ் வைகை வடிநில வட்டம், சிவகங்கை |
| 5. T. இளங்கோ | 23.05.1958 | உ.பொ (மின்) | மின் வட்டம், திருச்சி, மின் கோட்டம் எண, கோயமுத்தூர். |
| 6. E. ஜெயபாலன | 20.05.1958 | இ.பொ | கீழ் வைகை வடிநில வட்டம், சிவகங்கை முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் கோட்டம், காரைக்குடி |

| | | | |
|---|---|---|---|
| 7. S. தினகரவேல் | 01.06.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், சென்னை. தென்மாநகரக் கோட்டம், சென்னை. |

**ஜுன் 2016**

| | | | |
|---|---|---|---|
| 1. P. சுப்பிரமணி | 12.06.1958 | உ.பொ (மின்) | மின் வட்டம், திருச்சி, மின் கோட்டம், கோயமுத்தூர் |
| 2. P. மாரியப்பா | 02.06.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், வேலூர் கட்டட க(ம)ப கோட்டம், திருவண்ணாமலை (25.01.2012 முதல் த.ப.நி) |
| 3. S. முத்தழகன | 14.06.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், மருத்துவப் பணிகள் சென்னை, கட்டட பராமரிப்பு கோட்டம் மருத்துவப் பணிகள் சென்னை |

**ஜுலை 2016**

| | | | |
|---|---|---|---|
| 1. K. சகுந்தலா | 19.07.1958 | ஆ.அ | கண்காணிப்பு பொறியாளர், பவானி வடிநில வட்டம், ஈரோடு. |
| 2. S. சேகர | 14.07.1958 | இ.பொ | கீழ் வைகை வடிநில வட்டம், சிவகங்கை கீழ் வைகை சிறப்பு திட்ட கோட்டம், மானாமதுரை. |
| 3. P.சண்முகம் | 12.07.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், சேலம். கட்டட க(ம)ப கோட்டம், நாமக்கல். |
| 4. P.காசி விஸ்வநாதன | 20.07.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், சேலம். கட்டட க(ம)ப கோட்டம், அரியலூர். |
| 5. S. இரத்தினசாமி | 28.07.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், திருநெல்வேலி. கட்டட க(ம)ப கோட்டம், நாகர்கோவில். |
| 6. P.அன்பழகன | 02.07.1958 | இ.பொ | திட்ட உருவாக்க வட்டம், சேலம். திட்டங்கள்திட்டம்மற்றும்வடிவமைப்புகோட்டம் சேலம் |

**ஆகஸ்டு 2016**

---------- ஒருவருமில்லை -----------

**செப்டம்பர் 2016**

| | | | |
|---|---|---|---|
| 1. S.திருவேங்கடத்தான | 08.09.1958 | உ.பொ | கட்டட க(ம)ப வட்டம், சென்னை. கட்டட கட்டுமானம் கோட்டம், எண் 1, சென்னை |

**அக்டோபர் 2016**

---------- ஒருவருமில்லை -----------

**நவம்பர் 2016**

| | | | |
|---|---|---|---|
| 1. T.R. கணேஷ் | 17.11.1958 | உ.பொ (மின்) | மின் வட்டம், மதுரை, மின் கோட்டம், (மருத்துவப்பணிகள்), மதுரை. |
| 2. P. மகாலிங்கம் | 15.11.1958 | இ.பொ | கட்டட க(ம)ப வட்டம், சேலம். கட்டட க(ம)ப கோட்டம், தருமபுரி |

**டிசம்பர் 2016**

| | | | |
|---|---|---|---|
| 1. R. பழனிச்சாமி | 04.12.1958 | இ.பொ | சிறப்பு திட்ட வட்டம்,பழனி, நங்காஞ்சியார் வடிநில கோட்டம்,பழனி. |
| 2. S. பெரியசாமி | 28.12.1958 | உ.பொ (மின்) | தொழில்நுட்ப கல்வித்துறை, சென்னை - 25. தொழில்நுட்பக் கல்வி மின் உப கோட்டம், திருச்சி |

க. திருமாறன்,

முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து

(ம) தலைமைப் பொறியாளர், (பொது)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் முன்னாள் உறுப்பினர் பொறியாளர் K.வெங்கட்ராமன் உதவிப்பொறியாளர் (ஓய்வு)அவர்கள் 06.02.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளை உறுப்பினர் பொறியாளர் K.சண்முகம், உதவி பொறியாளர் (ஓய்வு) அவர்களின் சகோதரர் திரு.K.முத்துகிருஷ்ணன் அவர்கள் 12.01.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தலைவர் பொறியாளர் M. பஞ்சவர்ணம் உதவி செயற்பொறியாளர் அவர்களின் சகோதரியின் கணவர் ச.தியாகராஜன் அவர்கள் 13.10.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளை உறுப்பினர் பொறியாளர் M.பழனியப்பன் உதவி செயற்பொறியாளர் அவர்களின் மாமனார் R.M.கருப்பையாஅவர்கள் 28.11.2015 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சிவகங்கை கிளை உப தலைவர் பொறியாளர் A.திருவேங்கடமூர்த்தி உதவி செயற்பொறியாளர் அவர்களின் மாமனார் M.பாண்டியன் அவர்கள் 01.08.2015 இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் உறுப்பினர் பொறியாளர் M.வெங்கடேசன் பணி ஆய்வாளர் அவர்களின் தகப்பனார் திரு.M.மருதநாயகம் (பொபது ஓய்வு) அவர்கள் 13.02.2016 இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் K.கண்ணன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் 16.02.2016 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# இயங்கும் உலகம்

## தருமபுரி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை பொதுக்குழு கூட்டம் தருமபுரியில் 03.01.2016 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கியது. கூட்டத்திற்கு கிளை தலைவர் ஏ. செல்வராஜ் அவர்கள் தலைமையேற்றார். உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு மாநில பொதுச்செயலர் D. முருகேசன், மாநில உபதலைவர் எஸ். பாஸ்கரன், மேற்கு மண்டல செயலாளர் C. பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். கிளை செயல்பாடுகள் பற்றி கிளை செயலர் பொறியாளர் எஸ். கிருஷ்ணன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் 32 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பின்னர் கிளை வரவு செலவு கணக்கினை கிளைப் பொருளாளர் பொறியாளர் T.வெங்கடேசன் அவைக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார். பின்னர் மையச்சங்க செயல்பாடுகள் பற்றி பொதுச்செயலர் D. முருகேசன் நீண்டதொரு உரையாற்றினார். மையச்சங்க செயல்பாடுகள் பற்றி மாநில உபதலைவர் எஸ். பாஸ்கரன், மேற்கு மண்டல C. பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினார்கள். சமீபத்தில் ஓய்வு பெற்ற உறுப்பினர்கள் G. விஜயன் உதவி செயற் பொறியாளர், O.R. வடிவேல் உதவி செயற் பொறியாளர், அவர்களுக்கு மையச்சங்க பொறுப்பாளர்கள் பொன்னாடை போற்றி கவுரவித்தனர். ஓய்வு பெற்ற உதவி செயற் பொறியாளர்கள் தங்களுக்கு சங்கம் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தனர்.

2016ம் ஆண்டிற்கான நாட்சுவடி மற்றும் நாட்காட்டி மூத்த பொறியாளர்களுக்கு மையச்சங்க பொறுப்பாளர்களால் வழங்கப்பட்டது. உபதலைவர் ஊ. நகுலன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. அரசு ஆணை 1 க்கு உரிய விதி திருத்தம் பெற்று தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. இளம்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் பணிவரன் முறை விரைவில் பெற்று தந்தமைக்கு மையச்சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. மாற்று சங்கத்தினர் அரசு ஆணை 1 மூலம் பதவி உயர்வு பெற்ற உதவி பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை தடுப்பார்களேயானால் 2007 முதல் பணியமர்த்தப்பட்ட TNPSC உதவி பொறியாளர்களுக்கு துறை மாற்ற முன்மொழிவை நிறுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கிறது.
3. உதவி செயற்பொறியாளர் காலியிடப் பணிகள் வருடந்தோறும் ஒப்புதல் பெற (Estimate Vacancy) இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

4. உதவி செயற்பொறியாளர் (மின்) பதவி பணிவரன் முறை விரைவில் பெற்று தர கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.
5. இனிவருங்காலங்களில் செயற்பொறியாளர் பதவி உயர்விலும் 1:3 விகிதத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

## சேலம் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 03.01.2016 அன்று காலை 10.30 மணிக்கு சேலம் பொதுப்பணித்துறை வளாகம் கிளைச்சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி கிளையின் தலைவர் பொறி.தி.உதயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் பொறியாளர். த.முருகேசன். மாநில துணைத்தலைவர் பொறியாளர்.எஸ். பாஸ்கரன் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் பொறியாளர்.சி. பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர். பி.பாலசுப்ரமணியம் வரவேற்று பேசினார். பின்னர் கிளைத்தலைவர் உரைக்குப்பின் கிளைச்செயலாளர் பொறியாளர். இரா.வேதநாராயணன் கிளைச்சங்க நடவடிக்கைகள் குறித்து பேசினார். தொடர்ந்து மேற்குமண்டல செயலாளர் அவர்கள் மையசங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் மாநில துணைத்தலைவர் அவர்கள் தனது உரையில் மத்திய சங்க நடவடிக்கைகள் குறித்தும், கூட்டங்களில் உறுப்பினர்கள் திரளாக தவறாமல் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் பேசினார். அதனை தொடர்ந்து மையச்சங்க பொறுப்பாளர்களும் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்றதற்காக பொறியாளர். ஆர். செல்வமணி அவர்களும் பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராக பதவி உயர்வு பெற்றதற்காக பொறியாளர் அருள் அவர்களும் மற்றும் மூத்த பொறியாளர்களும் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார்கள்.

மாநில பொதுச் செயலாளர் அவர்கள் தமது உரையில் உதவிப்பொறியாளர் 72 நபர்களுக்கு பணிவரன்முறை ஆணை பெற்று தந்தது குறித்தும், இளம் பொறியாளர் / உதவிப் பொறியாளர் பணிவரன்முறை பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராக பணி உயர்வு ஆணை வழங்கியது குறித்தும், பணி ஆய்வாளர் பதவியிலிருந்து வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு வழங்கியது குறித்தும், முதன்மை தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ள கோப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணித்தொகுதி விதிகளில் "Supervisor" என்ற பெயர் "Junior Engineer" ஆக மாற்றப்பட்டு ஆணை பெற்றது குறித்தும், உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் குறித்தும் விரிவாக உரையாற்றினார்.

பின்னர் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு மாநில பொதுச்செயலாளர் விரிவான பதிலுரை அளித்தார்.பின்னர் 2014-15ஆம் ஆண்டில் உறுப்பினர் பொறி.ஆர்.வெங்கடாசலம்,

உதவி செயற்பொறியாளர் அவர்களின் மகள் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றதற்கு சிறப்பு பரிசு வழங்கப்பட்டது. உறுப்பினர்கள் அனைவருக்கும் நூற்றாண்டு விழா குறுந்தகடு, 2016ம் ஆண்டுக்கான நாட்காட்டி, நாட்குறிப்பேடு மற்றும் கிளைச்சங்க பொறுப்பாளர்கள் சார்பில் தினசரி நாட்குறிப்பேடு ஆகியன வழங்கப்பட்டது. மூத்த பொறியாளர் பொறி. ம. பலராமன் அவர்கள் DECT மற்றும் மூத்த பொறியாளர்கள் சங்கம் சார்பில் வாழ்த்துரை வழங்கினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. சென்னை மற்றும் இதர பகுதிகளில் வெள்ளத்தால் உடமைகளை இழந்த அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும், வெள்ளத்தால் உயிரிழந்தோர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதுடன் பாதிக்கப்பட்ட அனைவரும் நலம்பெற தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை பிரார்த்திக்கிறது.
2. வெள்ள பாதிப்பு பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்ட பொறியாளர்கள், அரசு பணியாளர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு மனமார்ந்த பாராட்டு தெரிவிக்கப்படுகிறது.
3. தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப்பணித்தொகுதி பதவிப்பெயர்மாற்றம் விதி திருத்த ஆணை பெற்றுத்தந்தமைக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
4. தேர்வாணையம் மூலம் இளம்பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.
5. 72 உதவிபொறியாளர்களுக்கு பணி வரன்முறை பெற்றுத் தந்தமைக்கும் மற்றும் பட்டயம் பெற்ற 23 பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளராக பணி உயர்வு பெற்று தந்தமைக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
6. இளம் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளராக பணி பெயர்மாற்றமும் (Redesignation) மற்றும் இளம்பொறியாளர்/ உதவிப்பொறியாளர் அனைவருக்கும் பணிவரன்முறை பெற்றுதர கேட்டுக் கொள்ளப்படுகிறது.
7. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் விரைவில் பெற்றுத்தர கேட்டுக் கொள்ளப்படுகிறது.
8. இளம் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்ட பொறியாளர்களுக்கு மிக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணி இடைக்காலம் பிழை பொருத்தல் கோப்புமீது நடவடிக்கை எடுத்து ஆணை பெற்று தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.
9. சேலம் கிளை இல்ல பணியாளர் சம்பளம் ரூ. 3500/- ல் இருந்து ரூ. 4000/- ஆக உயர்த்தி வழங்குவதெனவும், வரும் பொங்கல் திருநாளில் ஒருமாத சம்பளம் போனஸாக வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

இறுதியில் கிளையின் இணைசெயலர் பொறியாளர். பி. சக்திவேல் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

## திண்டுக்கல் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் கிளையின் பொதுக்குழு கூட்டம், பழனியில் ஒய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கம் அலுவலக கட்டிடத்தில் 10.01.2016 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில் கிளைத்தலைவர் பொறி.M.பாக்கியசாமி அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

சிறப்பு அழைப்பாளர்களாக மாநில தலைவர் பொறி.M.பஞ்சவர்ணம் அவர்களும், மையமண்டலச் செயலாளர் பொறி.C.P.மோகன்குமார் அவர்களும் கலந்து கொண்டனர்.

உறுப்பினர் அறிமுகத்திற்கு பின்னர் கிளைத் துணைத்தலைவர் பொறி.V.சரவணக்குமார் வரவேற்புரை ஆற்றினார். கிளைத் தலைவர் சங்க நடவடிக்கைகள் குறித்தும், கிளைச் செயலர் பொறி.K.K.ஆறுமுகம் கிளையின் நடவடிக்கைகள் குறித்தும் திண்டுக்கல் கிளைக்கு கட்டிடம் தேவைப்படுவது குறித்தும் அதற்குறிய இடத்தை தேர்வு செய்து கிளை மற்றும் மையச் சங்கத்தின் ஒப்புதல் கோரி கிளையில் தமது கருத்தை தெரிவித்தார். உறுப்பினர்கள் பொறியாளர்கள் K.விஜய மூர்த்தி, K.சதாசிவம் ஆகியோர் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு, இளநிலை பொறியாளர் பணிவரன்முறை, இளநிலை பொறியாளர் தரநிலைப் பட்டியல் குறித்து தமது கருத்துக்களை தெரிவித்தனர். பின்னர் பொறி.M.பஞ்சவர்ணம், பொறி.C.P.மோகன் குமார் உறுப்பினர்களது கருத்துகளுக்கு விளக்கமும், சங்க நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக பேசினர்.

பின்னர் கிளையின் உறுப்பினர் M.செந்தில் பணி ஆய்வாளர் பணியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராக பதவி உயர்வு பெற்றமைக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. கிளையின் வரவு, செலவு கணக்கை பொருளாளர் பொறி.த.ரவிச்சந்திரன் படித்து உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்றார்.

பின்னர் பொறி.த.ரவிச்சந்திரன், பொருளாளர் நன்றி கூற மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. இளநிலை பொறியாளர்களின் விடுபட்ட பணிவரன்முறையினை உடன் பெற்றுத்தர மையச் சங்கத்தை திண்டுக்கல் கிளை கேட்டுக் கொள்கிறது.
2. தமிழகத்தில் சென்னை மற்றும் கடலூர் மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் உடனடியாக மீட்பு பணியில் ஈடுபட்ட சமூக ஆர்வலர்கள், அரசு அதிகாரிகள், தமிழக அரசு மற்றும் தாராளமாக உதவி செய்த அனைவருக்கும் திண்டுக்கல் கிளை பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.
3. திண்டுக்கல் கிளைக்கு சங்க கட்டிடம் கட்டுவதற்கு மனமுவந்து இடம் கொடுக்க முன்வந்த ஒய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளுக்கு திண்டுக்கல் கிளை மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.
4. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்விற்கு இளநிலை பொறியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை திண்டுக்கல் கிளை கேட்டுக் கொள்கிறது.
5. பணி ஆய்வாளர்களின் பதவி உயர்வை விரைவில் பெற்றுத் தர மையச் சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.

## திருநெல்வேலி - தூத்துக்குடி கிளை:

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 31.12.2015 வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் கிளைத்தலைவர் பொறி.K.முருகன் அவர்கள் தலைமையில் கிளைச்சங்க கட்டிடத்தில் பொறியாளர் S.ரத்தினசாமி அரங்கில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக தென்மண்டல செயலாளர் பொறி.H.ஜாகீர் உசேன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இறைவணக்கத்திற்கு பின் உறுப்பினர்கள் அறிமுகம் செய்துகொண்டனர்.

கிளையின் செயலாளர் பொறி.K.ஆதிமூலம், அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறினார்கள். கிளையின் பொருளாளர் பொறி.V.இராமகிருஷ்ணன் அவர்களால் வரவு செலவு அறிக்கை பொதுக்குழுவில் சமர்பித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் கூட்டத்தில் மூத்த பொறியாளர்கள் பொறி.D.வீரராஜ், பொறி.R.பாலையன்நாடார், மற்றும் பொறி.S.வேல்ஆனந்தராஜ், பொறி.A.S.நாகராஜன், பொறி.S.ஜெகநாதன்,பொறி R.பரமசிவம், பொறி.K.முருகன் ஆகியோர்கள் விவாதத்தில் பங்கேற்றனர்.

தெற்கு மண்டல செயலாளர் பொறியாளர் H.ஜாகீர் உசேன் அவர்கள் சங்கத்தின் தற்போதைய செயல்பாடுகள் பற்றி உரையாற்றினார்கள். மற்றும் உறுப்பினர்களின் பல்வேறு வினாக்களுக்கு பதிலுரை அளித்தார்கள். பின்பு இணைச் செயலாளர் பொறியாளர் S.ஜெகநாதன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

மேலும் பொறி.A.இராமையா, செயற்பொறியாளர், நதிநீர் இணைப்பு சிறப்பு கோட்டம், வள்ளியூர் மற்றும் பொறி N.அன்பழகன், உதவிபொறியாளர், பயிற்சியாளர் அவர்கள் இதயசுத்தி தியான பயிற்சி உறுப்பினர்களுக்கு அளித்தார்கள். கிளையின் சார்பாக அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. இக்கிளையின் தலைவர் பொறி.A.மோகன்தாஸ்,அவர்கள் மாறுதலில் சென்றதால் புதிய தலைவர் பதவிக்கு பொறி.K.முருகன், உதவிசெயற்பொறியாளர் அவர்களும், பொறி K.முருகன், தலைவர் ஆனதால் அந்த காலியிடமான உபதலைவர் பதவிக்கு பொறி.S.வேல்ஆனந்தராஜ், உதவிசெயற்பொறியாளர் அவர்களும், ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.
2. இக்கிளையின் உறுப்பினர் பொறி.K.ஆதிமூலம், உதவிப்பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி.K.வேலம்மாள் அவர்கள் மறைவிற்கும், பொறி.K.S.இரவிச்சந்திரன், உதவிசெயற்பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி.சிவபாக்கியம் அவர்கள் மறைவிற்கும், பொறி.S.கனகசுந்தரம், இளநிலைபொறியாளர் அவர்கள் தாயார் திருமதி.S.வள்ளியம்மாள் அவர்கள் மறைவிற்கும் இக்கிளை ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

3. இளநிலைப்பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நேரடியாக தேர்ந்து எடுக்க தடையாக உள்ள விதி திருத்தங்கள் அரசிடம் பெற முயற்சிகள் மேற்கொள்ள மையச்சங்கத்தை கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.
4. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணியமர்த்த, உரிய நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.
5. முதன்மை தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணிநீக்கம் செய்யப்பட்ட இளம்பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிமுறிவுக்கால பிழைப் பொறுத்தல் (Contonation of Break in Service) கருத்துருவை அரசுக்கு அனுப்பி உடன் ஆணை பெற்றுத் தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக் கொள்கிறது.
6. பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி, மற்றும் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவிகள் விரைந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
7. சங்க உறுப்பினர்கள் வெவ்வேறு பதவிகளில் பணிஓய்வு/பதவி உயர்வு பெறும் ஆணையினை உடன் பெற்று அந்தந்த கிளைக்கு அன்றே அனுப்ப நடவடிக்கை எடுக்கமாறு நெல்லை கிளை கேட்டுக்கொள்கிறது.
8. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு 2015-16ம் ஆண்டிற்கு உரியதை பெற நடவடிக்கை எடுக்குமாறு நெல்லை கிளை கேட்டுக் கொள்கிறது.
9. இளம்பொறியாளர் பதவியில் (பொறியியல் பட்டம் பெற்ற) பணிவரன் செய்யப்பட்டவர்களுக்கு விரைவில் உதவிபொறியாளர் பணி மாற்றம் பெற்றுத் தர விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நெல்லை கிளை கேட்டுக் கொள்கிறது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை உறுப்பினர் பொறியாளர் ஏ.வேலுச்சாமி உதவி செயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்திற்கு ரூ. 2000/- (இரண்டாயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளை உறுப்பினர் பொறியாளர் பி.திம்மன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ1600/- (ஆயிரத்து அறுநூறு மட்டும்) மையசங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.


தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் ஜெ.சாந்தா இளம் பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்திற்கு ரூ. 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## சேலம் கிளை பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகள்









## தருமபுரி பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகள்







# Wedding Invitation

**Mrs. V.Thamaraiselvi**

and

**Mr. A.Veluchamy, B.E.,M.B.A.,**

Assistant Executive Engineer/ PWD

Registration Department, Madurai.

***Request the pleasure of your presence with your family and friends on the occasion of the marriage of our son***

Selvan. **KARTHICK VELUCHAMY, B.E.,MS.,(USA)**

(Senior Engineer, Qualcomm, Sandiego, C.A., U.S.A.)

with

Selvi. **SUBHASHINI BALASUBRAMANIAN,B.Tech.,**

(D/o Mr. K.BalaSubramanian - Mrs. B.Kandaleela)

on Sunday, the 6th March 2016

between 10.00 a.m. and 11.00 a.m. at

**PTR Marriage Hall,**
**Race Course Road,**
**Chinna Chokkikulam,**
**Madurai - 2**

---

***With best compliments from:***

Relatives & Friends

**Betrothal and Reception: 05.03.2016, Saturday, 6.00 p.m**

நன்றி தினமணி, தேதி 14.02.2016

# 'பொதுப்பணித் துறையில் காலியிடங்களை நிரப்ப வேண்டும்'



புதுக்கோட்டையில் சனிக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு பொதுப்பணித் துறை பொறியியல் சங்க மாநில செயற்குழுக் கூட்டத்தில் பேசுகிறார், மாநிலப் பொதுச்செயலர் க. முருகேசன்.

புதுக்கோட்டை, பிப். 13: பொதுப்பணித்துறையில் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையில் சனிக்கிழமை தமிழ்நாடு பொதுப்பணித் துறை பொறியியல் சங்கத்தின் கிழக்கு மண்டல மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்கவந்த சங்கத்தின் மாநில பொதுச் செயலர் க. முருகேசன் கூறியது:

அடையாற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்துக்குச் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து மட்டும் திறந்து விடப்பட்ட நீர் மட்டும் காரணமில்லை.

பல்வேறு ஏரிகளிலிருந்து திறந்து விடப்பட்ட உபரிநீர் சேர்ந்து வெளியேறியதே காரணம். செம்பரம்பாக்கம் ஏரி திறப்பதில் பொதுப்பணித்துறை பொறியாளர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. நீர்வரத்தின் அளவைக் கணக்கிட்டேதான் பொறியாளர்கள் நீரைத் திறந்து விட்டனர் என்றார்.

முன்னதாக, நடைபெற்ற பொதுப்பணித்துறை பொறியியல் துறை (கிழக்கு மண்டலம்) மாநில செயற்குழு கூட்டத்துக்கு மாநிலத் தலைவர் எம். பஞ்சவர்ணம் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் எஸ். பாஸ்கரன் முன்னிலை வகித்தார்.

இதில், தலைமைப் பொறியாளர் பொது அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள 11 கோப்புகளை உடனடியாக முடித்துத் தர வேண்டும்.

பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள இளநிலை பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். பொதுப்பணித் துறையில் நேர்மையாகவும், நடுநிலையாகவும் நிர்வாகம் நடைபெற துறை தலைமைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமிக்க வேண்டும். காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பதவிகளை பதவி உயர்வு மூலம் நிரப்ப வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டச் செயலர் ஜி. அண்ணாமலை, தலைவர் தட்டார், பொருளர் கே. வெள்ளிமலை உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நன்றி புதுகை வரலாறு, தேதி 14.02.2016

# பொதுப்பணித்துறையில் தலைமைபதவிக்கு ஐஏஎஸ் அதிகாரியை நியமிக்க தீர்மானம்

புதுக்கோட்டை,பிப்.14–

புதுக்கோட்டையில் நடைபெற்ற தமிழ்நாடு பொதுப்பணித்துறை பொறியியல் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் பொதுப்பணித் துறையில் நேர்மையான நடுநிலைமையான நிர்வாகம் நடைபெற தலைமைபதவிக்கு ஐஏஎஸ் அதிகாரியை நியமிக்கவேண்டுமென தீர்மானம் நிறைவேற்றபட்டது.



புதுக்கோட்டையில் பொதுப்பணித்துறையின் தமிழ்நாடு பொறியியல் சங்க மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பொதுபணித்துறையின் பொது அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கோப்புக்களை தலைமை பொறியாளர் உடனே முடித்து தர வேண்டும், பொதுப்பணித் துறையில் காலியாக உள்ள இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், உள்ளிட்ட பணியிடங்களை உடனே நிரப்ப வேண்டும், பொதுப்பணித்துறையில் நேர்மையான நடுநிலைமையான நிர்வாகம் நடைபெற தலைமை பதவிக்கு ஐஏஎஸ் அதிகாரியை நியமிக்கவேண்டுமெனவும் காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பதவிகளை பதவி உயர்வு மூலம் நிரப்ப வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிரைவேற்றப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அச்சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் முருகேசன் கூறுகையில்:

செம்பரம்பாக்கம் நீர்திறப்பு பிரச்சனையில் பொதுப் பணித்துறை பொறியாளர்கள் மீது எந்த தவறும் இல்லை என்றும் தேவையான நேரத்தில் மட்டுமே ஏரி நீர் திறக்கப்பட்டது என்றும் மழை வழக்கத்தைவிட அதிகமாகபெய்ததே வெள்ளசேதத்திற்கு காரணம் என்று கூறினார்.

இதில் பொறியாளர்கள் மீது குற்றச்சாட்டு ஏதுமில்லை என்று கூறினார். பொதுபணித்துறையில் காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் உள்ளிட்ட புதிய பணிகள் 11 முக்கியமான கோப்புகளை பொதுத்தலைமை பொறியாளர் அரசுக்கு அனுப்பாமல் காலம் தாழ்த்தி வருவதாகவும் இதுகுறித்து பல முறை வலியுறுத்தியும் தலைமை பொறியாளர் அலட்சியமாக உள்ளதாகவும் இனியும் தலைமை பொறியாளர் காலம் தாழ்த்தினால் தமிழ்நாடு பொறியாளர் சங்கத்தினர் அடுத்த கட்ட போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக முருகேசன் கூறினார்.

## நன்றி தினமலர், தேதி 14.02.2016

### கோரிக்கை நிறைவேற்றாவிட்டால் போராட்டம்: பொறியியல் துறை செயற்குழு கூட்டத்தில் முடிவு

புதுக்கோட்டை, பிப். 14–

புதுக்கோட்டையில் பொதுப்பணித்துறை பொறியியல் துறை மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. மாநிலத்தலைவர் பஞ்சவர்ணம் தலைமை வகித்தார். மாநில செயலாளர் முருகேசன் மற்றும் மாநில துணைத் தலைவர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தமிழகம் முழுவதிலும் இருந்து பொதுப்பணித்துறை பொறியாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தலைமை பொறியாளர் அலுவலகத்தில் நீண்டகாலமாக 11 கோப்புகள் நிலுவையில் உள்ளது. அந்த கோப்புகளை உடனடியாக முடிக்க வேண்டும். பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள இளநிலை பொறியாளர் தொழில்நுட்ப உதவியாளர் வரைவாளர் பதவிகளை நிரப்ப வேண்டும். காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பதவிகளை பதவி உயர்வு மூலம் நிரப்ப வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில பொதுச்செயலாளர் முருகேசன் நிருபர்களிடம் கூறுகையில், பொதுப்பணித்துறை பொறியாளர்களின் கோரிக்கைளை அரசு நிறைவேற்றாவிட்டால் விரைவில் போராட்டம் கூடிய நிலைக்கு பொறியாளர்கள் தள்ளப்படுவார்கள்.



புதுக்கோட்டையில் நடந்த பொதுப்பணித்துறை பொறியியல் துறை மாநில செயற்குழு கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் முருகேசன் பேசினார்.

செம்பரம்பாக்கம் ஏரி திறப்பதில் பொதுப்பணித்துறை பொறி யாளர்கள் எந்தவித தவறும் செய்யவில்லை.

குறித்த காலத்திற்குள் திறக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது. நீர் திறக்கப்பட வேண்டிய நேரத்தில் தான் திறக்கப்பட்டது. இதில் பொறியாளர்கள் சரியான நேரத்தில் தான் நீரை திறந்துவிட்டனர் என்றார்.

## நன்றி தி இந்து, தேதி 14.02.2016

### ‘பொதுப்பணித் துறையில் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும்’

■ புதுக்கோட்டை

பொதுப்பணித் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென்று தமிழ்நாடு பொதுப்பணித் துறை பொறியியல் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம், மாநிலத் தலைவர் எம்.பஞ்சவர்ணம் தலைமையில் புதுக்கோட்டையில் நேற்று நடைபெற்றது. இதில், தமிழகத்தில் பொதுப்பணித் துறையில் 60 உதவி செயற் பொறியாளர், 137 இளநிலைப் பொறியாளர், 23 தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் 300 வரைவாளர் என மொத்தம் 520 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை உடனடியாக நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நன்றி தினத்தந்தி, தேதி 14.02.2016

தினத்தந்தி

### பொறியியல் சங்க மாநில செயற்குழு கூட்டம்


புதுக்கோட்டை, பிப்.14–

தமிழ்நாடு பொறியியல் சங்க மாநில செயற்குழு கூட்டம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில தலைவர் பஞ்சவர்ணம் தலைமை தாங்கினார். மாநில துணை தலைவர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாநில பொது செயலாளர் முருகேசன் கலந்துகொண்டு தீர்மானங்கள் குறித்து பேசினார். கூட்டத்தில் பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள இளநிலை பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டும். காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் பதவிகளை பதவி உயர்வு மூலம் நிரப்ப வேண்டும் என்பது உள்பட பல வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் அண்ணாமலை, தலைவர் தட்டார், பொருளாளர் வெண்ணிமலை உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


பொறியாளர் இரா. வேதமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் பொ.ப.து., தலைவர் தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை அவர்கள் குடியரசு தின பதக்கத்தினை மாவட்ட ஆட்சியர், அரியலூர் அவர்களிடமிருந்து பெறுகிறார்.



பொறியாளர் எம்.கல்யாணசுந்தரம், இளம் பொறியாளர் பொ.ப.து., திருவள்ளூர் கட்டிட உபகோட்டம், திருவள்ளூர் அவர்கள் குடியரசு தின நற்சான்றிதழினை மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களிடமிருந்து பெறுகிறார்.



தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநில தலைவர் G.விஜயகுமாரன் உ.செ.பொ, மற்றும் கடலூர் கிளை பொறியாளர்கள் M.செல்வராஜ் உ.செ.பொ, S.கிருஷ்ணசாமி இ.பொ. மற்றும் சென்னை கிளை பொறியாளர் M.ரவீந்திரன் ஆகியோரின் குடியரசு தின விழா பாராட்டு சான்றிதழ்கள்.



*Republic day - 2016*


Letter of Appreciation

I wish to place on record **"My Appreciation"** to Er. **G.Vijayakumaran,** B.E. Assistant Executive Engineer. PWD.Tindivanam. Viluppuram District. for his Good work done in discharging his duties in the above capacity during the year 2015-2016.

M.LAKSHMI, I.A.S.
COLLECTOR
VILUPPURAM DISTRICT

To

Er. G.Vijayakumaran, B.E.
Assistant Executive Engineer
PWD.Tindivanam



*Republic day - 2016*


Letter of Appreciation

I wish to place on record **"My Appreciation"** to Er. **M.Selvaraj,** M.E.M.I.E. Assistant Executive Engineer.P.W.D. Buildings(C & M)Sub Division. Viluppuram. for his Good work done in discharging his duties in the above capacity during the year 2015-2016.

M.LAKSHMI, I.A.S.
COLLECTOR
VILUPPURAM DISTRICT

To

Er. M.Selvaraj, M.E.M.I.E.
Assistant Executive Engineer.P.W.D.
Buildings(C & M)Sub Division.Viluppuram



*Republic Day 2015*


Letter of Appreciation

I wish to place on record **"My Appreciation"** to Thiru. **M.Selvaraj,** Assistant Executive Engineer (PWD)(Buildings), C & M Division, Viluppuram, for his good work.

V.SAMPATH IAS
COLLECTOR
VILUPPURAM DISTRICT

To

Thiru.M.Selvaraj,
Assistant Executive Engineer
(PWD)(Buildings),
C & M Division,
Viluppuram.



*Independence day - 2015*


Letter of Appreciation

I wish to place on record **"My Appreciation"** to Thiru. **M.Selvaraj,** Asst. Executive Engineer, P.W.D (Buildings) Sub. Division, Viluppuram. Viluppuram District for his Good work done in discharging his duties in the above capacity during the year 2014-2015.

M.LAKSHMI, I.A.S.
COLLECTOR
VILUPPURAM DISTRICT

To

Thiru. M.Selvaraj,
Asst. Executive Engineer,
P.W.D (Buildings) Sub. Division,
Viluppuram.



*Republic day - 2016*


Letter of Appreciation

I wish to place on record **"My Appreciation"** to Er. **S.Krishnasami,** D.C.E. Junior Engineer. P.W.D. Buildings(C & M) Section. Viluppuram. for his Good work done in discharging his duties in the above capacity during the year 2015-2016.

M.LAKSHMI, I.A.S.
COLLECTOR
VILUPPURAM DISTRICT

To

Er. S.Krishnasami, D.C.E.
Junior Engineer.P.W.D.
Buildings(C & M) Section.
Viluppuram



CERTIFICATE OF APPRECIATION

Tiruvallur District received heavy rainfall that adversely impacted causing heavy loss and damage during North East Monsoon 2015. Thiru/... Er. Raveendran. M. ... while working as Junior Engineer of PWD - Tiruvallur worked day and night without rest in the rescue and relief operations of the flood affected victims. I ... to place on record my appreciation of the hard work, sincerity and commitment displayed ... him/her during the period of extreme crisis.



டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள்.



அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் புதிய பொறுப்பாளர்களுடன்
TNEA மற்றும் DECT பொறுப்பாளர்கள்.

Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**MARCH 2016**




டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாமன்றத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் மாண்புமிகு ஜாவல் ஓரம் அவர்களுக்கு மூத்த பொறியாளர் Dr. பிரம்மதத் அவர்கள் நினைவுப் பரிசை வழங்குகிறார்.

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Published on 03-03-2016**
**Postng on 05-03-2016**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312